6. அறிவிப்பு

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பகுதியில், உறுப்பினர்களுக்கு, குறிப்பாக, திரு. துரைமுருகன் அவர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

5. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கைமீது விவாதம், மாண்புமிகு நிதியமைச்சர் பதிலுரை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் மாநில அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கைமீது கடந்த 5 நாட்களாக நடந்த விவாதத்தில் 42 உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களது மேலான கருத்துகளை எடுத்து இயம்பியிருக்கின்றார்கள். இந்தக் கருத்துகளுக்கு என்னுடைய விளக்கத்தை அளிப்பதற்கு முன்னால், எனக்கு இந்த அரிய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சராகும் தகுதி புரட்சித் தலைவர் அவர்களுடைய வாரிசாகவும், ஏழைகளினுடைய பாதுகாவலராகவும் விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு மட்டுமே உண்டு